

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வி.கே.மாஹில் தலைமைக் கழக பேச்சாளர் எழும்பூர் கோபி இல்ல திருமண விழா நடைபெற்றது. இதில் கழக அமைப்பு இணை செயலாளர் அன்பகம் கலை, கழக அமைப்பு துணை செயலாளர் ஆஸ்டீன், வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன், பகுதிச் செயலாளர்கள் வை.ம.அருள்தாசன், புழல் எம்.நாராயணன், எம்.எஸ்.நாகலிங்கம், ஈரோடு இறைவன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, முரசொலி மூர்த்தி, வண்னை நாகமணி, தச.கரிகாலசோழன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், சைலஸ், ரஜினி பாபு, டி.ஜி.ஆர்.மணிவண்ணன், கேபிள் த.வேல்கணேசன், சி.எஸ்.எஸ்.டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திமுக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும் மருத்துவ உதவித்தொகையை ஆவடி சட்டமன்ற தொகுதி பட்டாபிராம் பகுதியைச் சார்ந்த செல்வி ஸ்ரீநிதிக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் 25 ஆயிரம் ரூபாய்காண காசோலையை வழங்கினார். உடன் மாநகர பொறுப்பாளர் சன்பிரகாஷ் மாநகர மேயர் ஜி.உதயகுமார், பகுதி கழக செயலாளர் ஜி.நாராயணபிரசாத், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.துர்கா பிரசாத் துணை அமைப்பாளர் ரங்கநாதன் பகுதி அமைப்பாளர் டென்னிஸ் ராஜ், மற்றும் நிர்வாகிகள் இருந்தனர்.

வட கிழக்குப் பருவ மழை:

# சோழிங்கநல்லூர் தொகுதியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, அக்.28-

வடகிழக்குப் பருவமழையையொட்டி, நேற்று (27.10.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நிவாரணப் பணிகள் மற்றும் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நீலாங்கரையில் உள்ள ஆர்.கே.கன்வென்சன் சென்ட்ரலில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்குப் பிறகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழையினையொட்டி மண்டலம் 14 மற்றும் மண்டலம் 15 ஆகிய பகுதிகளில் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்று முடிந்துள்ளது. இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், நீர்வளத்துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மாவட்ட ஆட்சி நிர்வாகம், வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்கின்ற பல்வேறு சேவை துறைகளின் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதியைப் பொறுத்தவரை 181 தொடங்கி 201 வரை 20 வார்டுகள் கொண்டிருக்கும் மிகப் பெரிய தொகுதி. இத்தொகுதி வாக்காளர்களின் எண்ணிக்கை 7 இலட்சத்தை கடந்து வருகிறது.

தமிழ்நாட்டின் மிகப் பெரிய சட்டமன்றத் தொகுதியான சோழிங்கநல்லூரில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு வடகிழக்கு பருவமழையின்போதும் ஆண்டுக்கு 4 முறையாவது வருகை தந்து இத்தொகுதியில் அவர் எடுத்த பிரத்யேக நடவடிக்கை காரணமாக இன்றைக்கு புதிய மழைநீர் வடிகால்வாய்கள் ஏராளமாக கட்டப்பட்டது. நீர்வளத்து றை சார்பில் புதிய மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கப்பட்டது. நாராயணபுரம் ஏரி அதனுடைய உபரிநீரால் அதன் சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள பள்ளிக்கரணை, மடிப்பாக்கம் போன்ற பல்வேறு பகுதிகள் ஆண்டுதோறும் மிகப் பெரிய பாதிப்பைச் சந்திக்கும்.

இன்று அந்தப் பகுதிகளிலும் கடந்த 2 ஆண்டுகளாக துணை முதலமைச்சர் அவர்கள் ஐந்து முறைகளுக்கு மேல் வருகை தந்து புதிய இணைப்புக் கால்வாய்கள் கட்டியதன் விளைவு இன்றைக்கு அந்தப் பகுதிகளும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு 20 மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் அவரவர்கள் பகுதிகளில் உள்ள பாதிப்புகள் குறித்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இக்கூட்டத்தில் சொல்லப்பட்ட இன்னொரு செய்தி, வடகிழக்கு பருவமழை 84 செ.மீ அளவிற்கு ஆண்டுதோறும் பெய்யும். இதுவரை கடந்த 16ஆம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கியிருந்தாலும் இதுவரை பெய்திருக்கும் மழையின் அளவு 24 செ.மீ மட்டுமே. எனவே நான்கில் ஒரு பகுதி மழையினை மட்டுமே நாம் இப்போது சந்தித்து இருக்கிறோம். இன்னமும் மழைக்காலம் இருக்கின்றது.

சென்னையில் குறிப்பாக 2005, 2015ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரிய பாதிப்புகளும் டிசம்பர் முதல் வாரத்தில் ஏற்பட்ட மழை பாதிப்புகளால் தான். எனவே இவற்றினை எதிர்நோக்கி மக்கள் பிரதிநிதி களும், பிற சேவை துறைகளின் அலுவலர்களும் எந்த மாதிரியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று விரிவாக ஆலோசனை செய்யப்பட்டது.

சென்னையில் தற்போது குடிநீர் ஆதாரமாக உள்ள நீர்நிலைகள் 6, அவை பூண்டி ஏரி, ரெட்ஹில்ஸ் ஏரி, சோழவந்தான் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை, வீராணம் ஏரி போன்றவை சென்னைக்கு குடிநீர் வரத்து என்பது இருந்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆறுகளில் குடிநீர் இருப்பு தேவையாக 10,274 மில்லியன் கன அடி அளவில் நீர் இருக்கின்றது. இந்த ஏரிகளில் ஒட்டுமொத்தமாக 13,222 மில்லியன் கன அடி அளவு நீர் இருப்பு தேக்கி வைக்கலாம். ஆனால் தற்போது 10,274 மில்லியன் கன அடியாக 80% அளவிற்கு குடிநீர் கையிருப்பு இருக்கின்றது, என்றாலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24 அடி கொண்ட செம்பரம்பாக்கம் ஏரி 22 அடி நிரம்பியவுடன் 100 கன அடி, 200 கன அடி, 500 கன அடி என்று ஏறத்தாழ 750 கன அடி உபரிநீர் திறந்து விட்டு பொதுமக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது என்கின்ற வகையில் மிக கவனமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சோழிங்கநல்லூர் தொகுதியைப் பொறுத்தவரை 60க்கும் மேற்பட்ட ஏரிகளின் உபரிநீர் தான் கூடுதல் பாதிப்பை ஏற்படுத்தும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஏற்கெனவே பெரிய மழைநீர் வடிகால் பணிகள் கட்டப்பட்டதன் காரணமாக இந்த ஆண்டு பாதிப்பு என்பது பெரிய அளவில் இருக்காது, அந்தவகையில் இன்றைக்கு இந்த கூட்டம் மிக விரிவாக விவாதிக்க ப்பட்டது.

இன்றும் நாளையும் மோந்தா புயல் பாதிப்பினை எந்த அளவிற்கு எதிர்கொள்ளலாம் என்கின்ற வகையில் மாநில ஆராய்ச்சி நிபுணர் பிரதீப் ஜான் என்பவர் கூறி யிருக்கிறார்கள். கூடுதல் மழை என்று எடுத்துக் கொண்டால் 2.4 மி.மீ அளவிற்கு அதாவது 20 செ.மீ அளவிற்கு கடந்தும் பெய்வதற்கு மிதமானது, அதிமிதமானது, அதிகம் என்று அனைத்து வகையிலும் தகவல் தந்திருக்கிறார்.

எனவே நமது அலுவலர்கள் அனைத்து வகையிலும் மோந்தா புயலினை எதிர்கொள்வதற்கும், அடுத்து வருகின்ற எந்தவிதமான பாதிப்புகளை கடப்பதற்கும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டது.

### டெங்கு பாதிப்பு தொடர்பான கேள்விக்கு

ஏடிஸ் கொசு என்பது நன்னீரில் ஏற்படுவது. வீட்டைச் சுற்றி எப்போதெல்லாம் மழைநீர் தேங்குகிறதோ அந்த கொசு உற்பத்தி ஆகும். தற்போது மழைக்காலம் என்பதால் கூடுதலாக உற்பத்தி ஆகும். சென்னை மட்டு மல்ல ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு உயிரிழப்புகள் என்பது 2 வருடங்கள் தான் அதிகபட்ச உயிரிழப்பு. 2012 இல் 66 பேர், 2017 இல் 65 பேர் இறந்து இருக்கிறார்கள்.

இந்த அரசு அமைந்ததற்கு பிறகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளில் ஒற்றை இலக்கத்திலேயே டெங்கு இறப்பு என்பது இருந்துக் கொண்டிருக்கிறது. பாதிப்புகளின் எண்ணிக்கை 1500 இந்த ஆண்டு கடந்து இருக்கிறது.

இதற்கு முன்பு அரசு மருத்துவமனைகளில் சேர்பவர்களுக்கு மட்டுமே டெங்கு பாதிப்பு பத்திரிக்கைகளில் வெளியிடுவார்கள். இந்த அரசு அமைந்த பிறகு பொதுமக்களுக்கு போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு தனியார் மருத்துவமனைகளிலும் டெங்கு பாதிப்பு கணக்கெடுப்புக் கோரி அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் டெங்கு பாதிப்பு 1500 கடந்திருக்கிலாம். ஆனால் உயிரிழப்பு என்பது இந்தாண்டு இது வரை 9 பேர். இந்த 9 உயிரிழப்புகளும் பெரும்பகுதி இருதய நோய் பாதிப்பு உள்ளவர்கள் மற்றும் இணை நோய் பாதிப்பு உள்ளவர்கள், அதையும்கடந்து காய்ச்சல் பாதிப்பு அதிகமாக இருக்கும் போது மருத்துவமனைக்கு வராமல் மருத்துவர்களின் ஆலோசனை செய்யாமல் வீட்டிலேயே இருந்தவர்கள்.

இந்த வகையில் தான் 9 பேர் உயிரிழப்பு. சிறிய அளவிலான காய்ச்சல் பாதிப்பு என்றாலும் உடனடியாக மருத்துவரை அணுகி அதற்கான ஆலோசனை பெற்று மருந்து, மாத்திரைகள் எடுத்துக் கொள்வது நல்லது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சென்னை கன்னியாகுமரி தொழில்தட திட்ட இயக்குநர்/சோழிங்கநல்லூர் மண்டல கண்காணிப்பு அலுவலர் தெ. பாஸ்கரபாண்டியன், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், கைத்தறித்துறை இயக்குநர்/பெருங்குடி மண்டல கண்காணிப்பு அலுவலர் திருமதி மகேஸ்வரி இரவிக்குமார் மண்டலக்குழுத் தலைவர்கள் வி.இ.மதியழகன், எஸ்.வி.ரவிச்சந்திரன், நிலைக் குழு தலைவர் விஸ்வநாதன் மற்றும் முக்கிய சேவை துறைகள் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு57, பிராட்வே, பிரகாசம் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி ஸ்ரீராமுலு பூங்காவில் வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நேற்று (26.10.2025) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர். பிரியா, மண்டல அலுவலர் சி.விஜய்பாபு, செயற்பொறியாளர் (பொ) பி.சிவப்பிரகாசம், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வட கிழக்குப் பருவமழை:

# சென்னை மாநகராட்சியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

## மேயர் பிரியா ஆய்வு!

சென்னை, அக்.28-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, நேற்று (27.10.2025) மேயர் திருமதி. ஆர்.பிரியா, அண்ணாநகர் மண்டலம், வார்டு 106க்குட்பட்ட அரும்பாக்கம் மெட்ரோ அருகில் தமிழர் வீதி, இந்திரா காந்தி பாலம் பகுதியில் செல்லும் விருகம்பாக்கம் கால்வாயில் மழைநீர் சீராக செல்வதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணி மற்றும் தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-109, நமச்சிவாயபுரம் பாலம் அருகே விருகம்பாக்கம் கால்வாய் கூவம் ஆற்றுடன் இணையும் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-117க்குட்பட்ட அண்ணா சதுக்கம் அருகே கூவம் ஆறு கடலில் கடக்கும் முகத்துவாரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினைப் பார்வையிட்டு, மழைநீர் தங்குதடையின்றி கடலில் கலப்பதற்கான பணிகளை சிறப்புடன் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

எழும்பூர் 99-வது வார்டில்

# காவலர் குடியிருப்பில் நாய்களைப் பிடிக்க நடவடிக்கை!

## பரிதி இளம்சுருதி எம்.சி. பொதுமக்களிடம் நலம் விசாரித்தார்!

சென்னை, அக். 28 -

அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99 வது வார்டுக்கு உட்பட்ட கீழ்ப்பாக்கம் காவலர் குடியிருப்பில் வசித்து வரும் தலைமை காவலர் சங்கர் மனைவி திருமதி. ரம்யா நேற்று முன்தினம் மாலை வீட்டிலிருந்து கடைக்கு செல்லும் பொழுது, காவலர் குடியிருப்பில் சுற்றி வந்த ஒரு தெரு நாய் எதிர்பாராத விதமாக அப்பெண்மணியை கடித்துள்ளது,

உடனடியாக அருகில் உள்ள கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்துள்ளார்.

இச்செய்தி அறிந்தவுடன் கழக அயலக துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி கீழ்பாக்கம் காவலர் குடியிருப்புக்கு சென்று அங்கு சுற்றி தெரியும் தெரு நாய்களை, நாய் பிடிப்பவர் வைத்து அனைத்து தெரு நாய்களையும் பிடிக்கச் செய்தார்.

பிறகு தலைமை காவலர் சங்கர் இல்லத்திற்கு சென்று நலம் விசாரித்து ஆறுதல் தெரிவித்தார்.



வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு 106க்குட்பட்ட தமிழர் வீதி, இந்திரா காந்தி பாலம் பகுதியில் செல்லும் விருகம்பாக்கம் கால்வாயில் தூர்வாரும் பணியினை மேயர் ஆர்.பிரியா நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வ.சிவகிருஷ்ணமூர்த்தி, துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு ஒன்றியம் கொடிவலாசா அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் நடைப்பெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ குடும்ப அட்டை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பட்டா மாற்றம் என 46 அரசு சேவைகளுக்கு பொதுமக்கள் மனு அளித்ததும் உடனடியாக கர்ப்பிணிப் பெண்களுக்கு அரசு வழங்கும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார பொருட்கள் அடங்கிய தொகுப்பு, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துகள் அடங்கிய தொகுப்பு, வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறைகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதைப் பைகள் உள்ளிட்டவைகளை வழங்கினார் உடன் ஒன்றிய செயலாளர் பி.டி.சந்திரன் உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள்கள் பலர் உள்ளனர்.




கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.61, ஸ்ரீரங்கம் அவென்யு பகுதியில் ஆய்வு மேற்கொண்டு, தேங்கி இருந்த குப்பைகளை அகற்றவும், கழிவு நீர்க் குழாய்களில் காணப்பட்ட அடைப்பை நீக்கி சீர் செய்யவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவ்வாய்வின்போது சென்னை மாநகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் வாரிய அலுவலர்கள் உடனிருந்தனர்.